# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 யூலை மாதம் 18 ஆந் திகதி (திங்கள்) மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள**

**01.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம்** 2016.07.05 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/53)**

அ. மேல் மாகாணத்தில் மாகாண சபை நிர்வாகத்தின் கீழேயான பாடசாலைகளில் காணப்படும் மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அவ் எண்ணிக்கையை ஆசிரிய வகைகளுக்கு இணங்க வர்க்கப்படுத்தும் போது எவ்வளவு எண்ணிக்கையில் காணப்படுகின்றனர் ?

இ. தற்போது காணப்படும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மாகாணத்தில் இருக்க வேண்டிய மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை, அந்த எண்ணிக்கையினை ஆசிரியர்களின் வகைகளுக்கு இணங்க எவ்வளவு எண்ணிக்கை என இச் சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ஈ. 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற மேல் மாகாணத்தில் ஆசிரியர் சேவைக்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்குரிய போட்டிப் பரீட்சையில் சித்தி எய்தி இது வரை ஆசிரிய நியமனம் கிடைக்கப் பெறாத எண்ணிக்கை எவ்வளவு ?

உ. இப் பரீட்சையில் சித்தி பெற்ற அவ் எண்ணிக்கையினருக்கு எப்போது ஆசிரிய நியமனம் வழங்குவீர்கள் ?

ஊ. இதுவரை அப் பரீட்சையில் சித்தி எய்தியவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்காமைக்கு காரணமாக இருக்கும் தடை / தடைகள் என்ன ?

**02.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம்** 2016.07.05 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/55)**

அ. நீங்கள் இவ்வேளையில் பண்டாரகம வலையக் கல்விக் காரியாலய அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய ஒவ்வொரு பாடசாலைகளிலும் சாதாரணதர மற்றும் உயர்தர முடிவுகள் தொடர்பாக பகுப்பாய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளீர்களா ?

ஆ. அவ் வட்டாரத்தில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை சாதாரணதர வகுப்பு மற்றும் உயர்தர வகுப்புக்களை அடிப்படையாகக் கொண்ட பாடங்களுக்கு இணங்க வெவ்வேறாக ஒவ்வொரு பாடசாலைகளினதும் பரீட்சை முடிவு தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினை சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

இ. அப் பகுப்பாய்வு அறிக்கையின் மூலம் வழங்கப்பட்டுள்ள புள்ளி விபரங்களுக்கு இணங்க வட்டாரத்தினுள் கல்வித் தரத்தின் மேம்பாடு தொடர்பாக நீங்கள் திருப்திப்படுகின்றீர்களா ?

ஈ. பண்டாரகமை கல்வி வலையத்தில் கல்வித் தரத்தினை அதிகரிப்பதற்காக இவ்வேளையில் உங்களினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**03.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(கே/vi (1)16/56)**

அ. இல 129 வத்தேகெதர வீதி, மஹரகம முகவரியில் ம/ம 532/சீ வத்தேகெதர சகசுருவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல் கூட்டுறவுச் சங்கத்தில் நிதி மோசடி ஒன்று நிகழ்ந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ? அப்படியாயின் எவ்வகையான நிதி மோசடி ஒன்று ? எவ்வளவு நிதி ?

ஆ. இச் சங்கம் கூட்டுறவு சட்டத்தின் கீழ் நிதி வைப்பினை பெற்றுக் கொள்ள பதிவு செய்யப்பட்டிருந்தால் உரிய பதிவுச் சான்றிதளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றினை சமர்ப்பிப்பீர்களா ?

இ. மேலே கூறப்பட்ட சங்கத்தின் நிதி நடவடிக்கை தொடர்பாக 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளதா ? அங்கு மேற்கொள்ளப்பட்ட மோசடி வெளியாகி உள்ளதா ? அந்த கணக்காய்வு அறிக்கையினை சபைக்குச் சமர்ப்பிப்பீர்களா? இல்லையாயின் ஏன் ?

ஈ. வைப்பாளர்களின் நிதி பிற வங்கி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டு இருந்ததா ? அப்படியாயின் எம் முறையில் எந்த இடத்தில் ? இல்லையாயின் அந் நிதி தொடர்பாக எடுத்திருந்த நடவடிக்கை யாது?

உ. 2013, 2014, 2015, 2016 ஆம் ஆண்டுகளுக்காக பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ளதா ? பெயர் மற்றும் முகவரிகளுடன் அவர்கள் யார் ?

ஊ. மேலே கூறப்பட்ட பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டுள்ள முறை தொடர்பாக ஆவண அடிப்படையில் விடயங்களை முன்வைக்க முடியுமா ? அப்படியாயின் அவ் ஆவணங்கள் என்ன ?

எ. இந்த மோசடியுடன் தொடர்புடையவர்கள் இணங் காணப்பட்டு உள்ளனரா ? பதவி மற்றும் பெயரின் அடிப்படையில் அவர்கள் யார் ? அவர்கள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**04.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(கே/vi (1)16/57)**

அ. மேல் மாகாணத்தின் ஒவ்வொரு அரசியல் தொகுதிகளிலும் 2009/01/01 ஆந் திகதியில் இயங்காமல் இருந்த;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?

ஆ. முறையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இது வரை வருடாந்தம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?

இ. முறையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இன்று வரை வருடாந்தம் மூடப்பட்ட;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?

ஈ. முறையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இது வரை நட்டத்துடன் இயங்கும்;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை எவை ? வருடாந்த நட்டம் எவ்வளவு ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை எவை ? வருடாந்த நட்டம் எவ்வளவு?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை எவை ? வருடாந்த நட்டம் எவ்வளவு?

**05.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ சுகாதார, உள்நாட்டு வைத்திய, சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவை, மகளிர் விவகாரம் அத்துடன் சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு** **(கே/vi (1)16/58)**

அ. ஹோமாகம மீகொட தாய் சேய் சிகிச்சை நிலையத்தின் உரிமை எந்தத் தாபனம் அல்லது நபர்களிடம் காணப்படுகின்றது என்பதனை நீங்கள் இந்த மாகாண சபைக்கு தெளிவுபடுத்த முடியுமா ?

ஆ. இந்த சிகிச்சை நிலையத்தில் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக மீகொட வடக்கு, மீகொட தெற்கு, வட்டரக்க வடக்கு, பானலுவ ஆகிய பிரிவுகளில் இருந்து அதிகமான மக்கள் வருகை தருகின்றனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. இச் சிகிச்சைநடாத்தப்படும் கட்டடம் மிகவும் தூர்ந்த நிலையில் காணப்படுகின்றது என்பதனையும் அதன் இட வசதிகள் போதுமான அளவு இல்லை என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

ஈ. இக் கட்டடம் இறுதியாக எவ்வருடத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டது ?

உ. மீகொட தாய் சேய் சிகிச்சை நிலையத்தில் காணப்படும் குறைபாடுகளை குறைத்து மக்களுக்கு இலகுவாக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற முறையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க நீங்கள் விஷேட மத்தியஸ்தம் ஒன்றை வகிப்பீர்களா ?

**06.** **கௌரவ சரத் பதிரண உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு : (கே/vi (1)16/59)**

அ. மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்திற்கு கொழும்பு மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்திற்கு கம்பஹா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்திற்கு, களுத்துறை மாவட்ட உதவியாளர் உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்திற்கு 2014, 2015 ஆம் ஆண்டுகள் மற்றும் 2016 ஜூன் மாதம் 30 ஆந் திகதி கால எல்லையினுள் கொள்வனவு செய்யப்பட்ட காரியாலய உபகரணங்களின் மொத்தப் பெறுமதி எவ்வளவு ?

ஆ. அந்த அந்த வருடங்களில் வெவ்வேறாக அவ் இடங்களுக்காக கொள்வனவு செய்த பொருட்கள் என்ன ?

இ. பாவனைக்கு எடுத்த, புதிதாக வாங்கிய கொள்வனவினால் அந்த அந்த வருடங்களில் வெவ்வேறாக அவ்விடங்களில் பாவனையில் இருந்து அகற்றிய உபகரணங்கள் எவை ?

ஈ. அந்த அந்த காரியாலய பாவனைக்காக குறித்த வருடங்களில் புதிய நிர்மாணம் அல்லது பொருட்களை வாங்க ஒதுக்கப்பட்ட செலவு காணப்படுகின்றதா ?

உ. அந்த செலவுகள் ஏற்படக் காரணம் என்ன ?

**07.** **கௌரவ நந்தன பத்மகுமார உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(கே/vi (1)16/60)**

அ. i. 2014 ஆம் ஆண்டில் மேல் மாகாண மாகாண சபையின் மூலம் ஆசிரிய வெற்றிடங்களுக்காக ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்காக பரீட்சை நடாத்தப்பட்டதா ?
ii. அது எப்பாடங்களுக்காக எப்போது ?
iii. அந்த அந்தப் பாடங்களுக்காக எவ்வளவு வெற்றிடம் காணப்பட்டது ?

ஆ. i. நடாத்தப்பட்ட பரீட்சை முடிவுக்கு இணங்க ஆசிரியர்கள் ஆட்சேர்க்கப்பட்டனரா ?
ii. அது எவ்வளவு ?
iii. அந்த அளவை பாடரீதியாக குறிப்பிட முடியுமா ?

இ. i. இன்னும் ஆசிரிய வெற்றிடங்கள் காணப்படுகின்றனவா ?
ii. அது எவ்வளவு ? அது எப்பாடங்களுக்காக ?
iii. மாவட்ட அடிப்படையில் அது எவ்வளவு ?

ஈ. i. இவ் வெற்றிடங்களை நிரப்ப நீங்கள் எடுக்கும் நடவடிக்கை யாது ?
ii. அதற்காக எடுக்கும் கால எல்லை எவ்வளவு ?

**08.** **கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(கே/vi (1)16/61)**

அ. 1300 அளவான பிள்ளைகள் கல்வி பயிலும் மே/மா/நீர்/போலவலான நிமல மரியா மஹா வித்தியாலயத்தில் பாவனைக்கு உகந்ததாகாத படியால் தற்போது கட்டடம் ஒன்று அகற்றப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. எனவே நடனப் பாடம் மற்றும் மேலதிக பாடங்கள் தற்காலிக இடங்களில் நடாத்தப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. i. எனவே பாடசாலை கல்வி நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக கட்டடத் தேவைக்காக ஏற்பாட்டினை ஒதுக்க முடியுமா ?

ii. அப்படியில்லையாயின் பாடசாலை கட்டடத் தேவைக்காக தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக முன்வைக்கக் கூடிய தீர்வு என்ன ?

ஈ. தற்போது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் நிர்வகிக்கப்படும் கட்டடம் ஒன்று இந்த பாடசாலைக்கு அருகில் காணப்படுகின்ற போதும் அது 05 வருடங்களை விட அதிக காலமாக மூடப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

உ. கல்வி நடவடிக்கைக்காக இந்தக் கட்டடத்தினை பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க முடியுமா ?

ஊ. இப் பிரச்சினையைத் தீர்க்க எதிர்ப்பார்க்கும் கால எல்லை யாது ?

**09. கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(கே/vi (1)16/62)**

அ. மே/மா/கம்/மினுவன்கொட படேபொல ஆரம்ப பாடசாலையில் தற்போது கல்வி கற்கும் 350 அளவான பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட போதியளவு கட்டட வசதி இல்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. இப் பாடசாலையின் 4B மற்றும் 5 தரங்கள் தற்போது பாளடைந்த கட்டடத்தில் பேணப்படுவதுடன் 2A, 2B, 3A தரங்கள் தற்காலிக இடங்களில் நடாத்தப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அவ்வாறே இப் பாடசாலைக்கு நூலகக் கட்டடம் இல்லை என்பதனையும் நீங்கள் அறிவீர்களா ?

ஈ. இப் பாடசாலையின் ஆரம்ப வகுப்புக்குரிய பாடங்களுக்கு ஆசிரிய பற்றாக்குறை தற்போது காணப்படுகின்றது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

உ. i. இந்த பிரச்சினைக்கு விரைவாக நடவடிக்கை எடுப்பீர்களா ?

ii. இல்லையாயின் ஏன் ?

ஊ. இப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க எவ்வளவு கால எல்லையினை எதிர்ப்பார்க்கின்றீர்கள் ?

**10. கௌரவ ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :**

**(கே/vi (1)16/63)**

அ. மே/மா/நீர்கொழும்பு கல்வி வலையத்தின் கொச்சிக்கடை மஹா வித்தியாலயத்திற்கு மேல் மாகாண விளையாட்டு அமைச்சின் மூலம் பாடசாலை விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி மற்றும் விளையாட்டின் மேம்பாட்டிற்காக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டது ?

ஆ. அந் நிதியில் வேலையை நிறைவு செய்ய தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரரின் பெயரினைக் குறிப்பிட முடியுமா ?

இ. அந்த ஒப்பந்தக் காரரினால் இது வரை பூர்த்தி செய்யப்பட்ட வேலை என்ன ?

i. அந்த வேலையைப் பரிசோதனை செய்த தொழிநுட்ப உத்தியோகத்தர் யார் ?

ii. தற்போது பூர்த்தி செய்துள்ள வேலையின் தரம் தொடர்பாக உறுதிப்படுத்த முடியுமா ?

ஈ. i. இச் செயற்றிட்டம் தொடர்பாக மீள்பார்வை நடவடிக்கை ஒன்று உங்கள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு உள்ளதா ?

ii. வழங்கப்பட்ட நிதியிற்கு போதுமான அளவு சேவை ஒன்று கிடைக்கவில்லை என்பதனை நீங்கள் நம்புகின்றீர்களா ?

உ. i. இச் செயற்திட்டத்தின் நிதி அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது தொடர்பாக ஒழுங்கான விசாரணை ஒன்றினை மேற்கொண்டு அதன் முடிவினை விரைவாக இந்த சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

ii. இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபைக் கூட்டம்

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு :**

பிரேரணை :

"2016 யூன் மாதம் 05 ஆந் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் வரப்பட்ட முடிவிற்கு இணங்க இன்றைய தினம் (2016.07.18) ஆந் திகதி கலைந்து சென்ற பின்பு இச் சபை 2016 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி (செவ்வாய்க் கிழமை) மு.ப. 09.30 க்கு கூட வேண்டும்."

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

**01. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்**

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களினது புதிய அரசின் மூலமும், சென்ற அரசினால் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் ஊழல் மோசடி ஆட்கொலை, அரச சொத்துக்களின் முறைகேடான பாவனை தொடர்பாக இவ் வேளையில் குழு ஒன்றினை நியமித்து தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து தண்டனை வழங்குவதற்கு திட்டமிடுவது மகிழ்ச்சிக்கு உரிய விடயம் ஒன்றாகும்.

1989 மற்றும் 1990 கால எல்லையினுள் இந் நாட்டில் மிகப் பாரிய அளவாக அரச சொத்துக்களை அழித்து ஒழித்த, மனித உயிர்களை அழித்த காலம் அண்மைக்கால இலங்கை வரலாற்றில் இடம்பெறவில்லை எனவே இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குழு ஒன்றினை நியமித்து அவ் அரசாங்கச் சொத்துக்களை அழித்து மனித உயிர்களைக் கொண்ற நபர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கவும் மற்றும் அழித்து ஒழிக்கப்பட்ட அரசாங்க சொத்துக்களின் பெறுமதியை உரிய தவறிழைத்தவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் இம்மேல் மாகாண மாகாண சபை கேட்டுக் கொள்கின்றது. **(பி/vi (1)15/02)**

**02. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்**

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்வதில் பாரிய சிக்கல் மிக்க நிலைமை ஒன்றாக ஏற்பட்டுள்ளது.

முதலாம் தரத்திற்கும் மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக ஏனைய தரங்களில் பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறைக்கு இணைந்த வகையில் மிகவும் ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த ஏனைய தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அவ்வாறான ஒழுங்காக வேலைத் திட்டம் ஒன்றில்லை எனவே பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது பல்வேறுபட்ட கையூன்றல்களைப் பெறுதல் ஊழல் மோசடி போன்ற பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதனை கேள்விப்படக் கூடியதாக இருக்கின்றது.

எனவே முதலாம் தரத்திற்கு மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது தற்போது நடைமுறையில் உள்ளதும், அதேபோல் ஏனைய தரங்களுக்கு பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக மிகவும் சிறந்த ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து மேல் மாகாண சபையின் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய எல்லா பகுதியினரிடமும் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)15/04)**

## XI. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.07.05 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.